# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றநடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 99 /பேரூ/2026**
**நாள் : 24.08.2026**

இரா. மகாராஜா,
அக்ரஹார வாழப்பாடி,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், அக்ரஹார வாழப்பாடி, 35, தம்மம்பட்டி மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மகாராஜா என்பவரது 01.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.04.2026 அன்று பெறப்பட்டு, 99/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், அக்ரஹார வாழப்பாடி, 35, தம்மம்பட்டி மெயின் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மகாராஜா என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 01.04.2026 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட 28.02.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், அக்ரஹார வாழப்பாடி பகுதியில் அமைந்திருக்கும் நஞ்சை விவசாய நிலங்கள் சுமார் 100 ஏக்கருக்கு மேல் வாழப்பாடி பாப்பான் ஏரியிலிருந்து வரும் உபரி நீர் மூலம் பாசனம் பெறுகிறது.

இவற்றில் 12வது வார்டு கவுன்சிலர் சாந்தகுமாரி சரவணன் அவர்களின் வார்டு எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள நஞ்சை விவசாய நிலங்களுக்கு பாயும் பாப்பான் ஏரி வாய்க்காலில் சாலை மற்றும் கழிவுநீர் வடிகால் வசதி கோரி வைக்கப்பட்ட கோரிக்கைக்கு நீர்வழிப் பாசன வாய்க்காலில் சாலை மற்றும் வடிகால் வசதி முதலான எந்தவிதமான ஆக்கிரமிப்புகளையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் மீறினால் உயர்நீதிமன்ற பேராணைக்கு எதிரானதாகிவிடும் என சுட்டிக்காட்டி முந்தைய பேரூராட்சி செயல் அலுவலர் (திரு. அ. கணேசன்) அவர்கள் இக்கோரிக்கையை (ந.க.எண். 175/2023/அ2) நாள் 23.02.2023 அன்றே நிராகரித்து இருந்த நிலையில்,

தற்போது அதே பாப்பான் ஏரி நீர்வழிப் பாசன வாய்க்காலில் பேரூராட்சி தரப்பில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நீர்வழிப்பாதைகளில் அவசர கதியில் சிமெண்ட் முதலான கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஏற்கனவே, நீர்வழிப்பாதையில் கழிவுநீர் கலக்கப்படுவது குறித்து பாப்பான் ஏரிப்பாசன விவசாயிகள் சங்க தலைவர் (திரு. தொப்பாளன்) அவர்கள் தொடர்ந்த (W.P. No. 13375 of 2020) வழக்கில், நீர்வழிப்பாதையில் உள்ள கழிவுநீர் ஆக்கிரமிப்புகளை அகற்ற மாவட்ட ஆட்சித்தலைவர், வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு நீதிமன்றம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவையும் மீறி, கழிவுநீரானது பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் மற்றும் 12வது வார்டு கவுன்சிலர் சாந்தகுமாரி சரவணன் அவர்கள் முன்னிலையில் நீர்வழிப்பாதைகளில் கலப்பதும், கட்டுமான பணிகளை அவசரகதியில் மேற்கொள்வதும் நேரடியாக நீதிமன்ற அவமதிப்பை (Contempt of Courts Act, 1971) காட்டுகிறது.

எனவே,

1. நீர்வழிப்பாதைகளில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை உடனடியாக நிறுத்த உத்தரவு பிறப்பித்தும்,
2. சம்பந்தப்பட்ட இடத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் PWD மூலம் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தும்,
3. நீர்வழிப்பாதைகளை மீண்டும் பழைய நிலைக்கு விவசாய பயன்பாட்டிற்கு ஏற்றார் போல கொண்டுவர உத்தரவிட்டு எங்கள் வாழ்வாதாரமான விவசாயத்தை காக்கும்படியும்,
4. நீர்வழிப்பாதைகளை காக்க பல்வேறு சட்டங்கள், தீர்ப்புகள் இருந்த போதிலும் அவற்றை அழிக்கும் நோக்குடன் செயல்படும் பேரூராட்சி செயல் அலுவலர், தலைவர், சம்பந்தப்பட்ட கவுன்சிலர்கள் மீது நடவடிக்கை எடுத்து,
5. மக்களின் வரிப்பணத்தை வீணடிக்கும் இது போன்ற செயல்களுக்கு (W.P. No.29422 of 2025) என்ற நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இதுபோன்ற நீர்நிலைகளில் கட்டுமானம் கட்ட அனுமதி அளித்த அதிகாரிகளிடமிருந்து இழப்பீடு பெற்று நல்ல திட்டங்களுக்கு பயன்படுத்துமாறும் பாப்பான் ஏரிவாய்க்கால் பாசன விவசாயிகள் சார்பாக கேட்டுக்கொள்ளப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 24.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.05.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 434/2026/அ1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“சேலம் மாவட்டம், வாழப்பாடி பேரூராட்சி 13வது வார்டு காசி படையாச்சி தெருவின் 90 குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அப்பகுதியின் அருகே உள்ள பாப்பான் ஏரி உபரிநீர் வாய்க்கால் வழியாக அருகே உள்ள விவசாய நிலங்களில் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில், அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் கழிவு நீர் வெளியேற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உபரி நீர் வடிகாலை அடைத்ததால் கழிவுநீர் வெளியேற வழி இல்லாமல், அப்பகுதியில் பொது சுகாதார சீர்கேடு ஏற்பட்டதுடன், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக் கூடிய சூழல் ஏற்பட்டதால் 15.10.2025 அன்று வாழப்பாடி பேரூராட்சி பகுதியில் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நேரடி ஆய்வின் போது மேற்குறிப்பிட்ட பகுதிவாழ் பொதுமக்களால் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் முறையீடு செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து, பொது மக்களின் மேற்காண் கோரிக்கையின் அடிப்படையில், பாப்பான் ஏரி உபரி நீர் வாய்க்கால் பகுதியில் நேரடி தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, காசி படையாச்சி தெருவில் 90 குடியிருப்புகள் மற்றும் அருகாமையில் உள்ள 215 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் புதியதாக வடிகால் அமைத்து கழிவுநீர் வெளியேற்ற பேரூராட்சியின் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில், வாழப்பாடி பேரூராட்சி மன்ற தீர்மான எண். 138(17), 15.10.2024 நாளிட்ட தீர்மானத்தில் வாழப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட காசி படையாச்சி தெருவில் சேகரமாகும் வடிகால் கழிவுநீர் ஏரி வாய்க்காலில் கலப்பதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிப்பதாலும் மற்றும் காசி படையாச்சி தெருவின் தனியார் இடத்தில் கழிவுநீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டும் காசி படையாச்சி தெரு முதல் தம்மம்பட்டி சாலையில் உள்ள மகேஸ்வரி தியேட்டர் வரை வடிகால் அமைத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்திட பேரூராட்சி இளநிலை பொறியாளரை கேட்டுக்கொள்ள அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (தீர்மான நகல் இணைக்கப்பட்டுள்ளது)

சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மாவட்ட பேரூராட்சிகளின் உதவி செயற் பொறியாளர் மற்றும் வாழப்பாடி பேரூராட்சி (தொகுப்பு) இளநிலை பொறியாளர் ஆகியோரால் தல ஆய்வு செய்யப்பட்டு 600 மீட்டர் நீளத்திற்கு புதியதாக வடிகால் அமைத்திட ஏதுவாக ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் வழியாக சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிருவாக அனுமதி வழங்கக் கோரி வாடிப்பாடி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 789/2024/அ1 நாள் 15.10.2024ல் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

வாழப்பாடி வட்டாட்சியரின் கடித ந.க.எண். 147/2025/ஆ1 நாள் 21.01.2025ல் சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், அக்ரஹார வாழப்பாடி கிராமம் புல எண்கள் 28,29,30,45,48,49,50 மற்றும் 59ல் பாப்பான் ஏரி வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரியது சேலம் மாவட்ட ஆட்சியரின் நேரடி அறிவுரையின் பேரில் மேற்படி புலங்களை 10.01.2025 அன்று வாழப்பாடி குறுவட்ட நில அளவரால் அளவைப் பணி மேற்கொண்டு ஆக்கிரமிப்பு விவரங்கள் அடங்கிய படிவம் 1 மற்றும் வண்ணப் புகைப்படத்துடன் கூடிய வரைபடம் தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தில் படிவம் 1ல் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்புகளை தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905 மற்றும் தமிழ்நாடு குளங்கள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுகை சட்டம் மற்றும் விதிகள் 2007ன்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி வண்ண புகைப்படத்தினை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 182 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 128ன்படி பேரூராட்சிக்கு சொந்தமான தெருக்கள் மற்றும் பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை மட்டுமே அகற்றிட பேரூராட்சி செயல் அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1905ஆம் வருடத்திய ஆக்கிரமிப்பு சட்டத்தின்படி ஆக்கிரமிப்பு அகற்றுதல் குறித்த அறிவிப்பு படிவம் 7 மற்றும் 6 ஆகியவற்றை தாக்கீது செய்யும் அதிகாரம் வருவாய்த் துறைக்கு மட்டுமே உள்ளது.

சென்னை, நில நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.டி1/61823/1992, நாள் 24.11.1992ன்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற நோட்டீஸ் வழங்கும் நடைமுறைகளை சரியாக கடைபிடிக்கப்பட வேண்டும் எனவும், Annexure 1 Group IIல் 1) Grazing ground 2) Cattle Stand, 3) Tharashing floor, 4) Burial ground, 5) Cart Stand, 6) Ponds, Kuttais, 7) Topes, 8) Streets and lanes in Panchayats and Municipalities, Salai, Path wayல் உள்ள

ஆக்கிரமிப்புகள் மட்டுமே சம்பந்தபட்ட உள்ளாட்சி அமைப்புக்கு தொடர்புடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 540, வருவாய்த் (LD6(2)) துறை, நாள் 04.12.2014ன்படி
(i) General Procedure : In general as per Section 7 of Tamil Nadu Land Encroachment Act, 1905. before taking proceedings, the Collector or Tashildar shall cause to serve on the person a notice calling upon him to show cause why he should not be evicted. Further as per notice under Section 6 of the Tamil Nadu Land Encroachment Act, 1905 any person unauthorizedly occupying any land may be summarily evicted by the Collector, Tashildar, Deputy Tashildar (or any other officers authorized by the State Government in this regard) by serving such notices in the matter prescribed under Section 25 of the Tamil Nadu Revenue Recovery Act, 1864.

(ii) Original Petition to be filed at Taluk level:

- The petitioners seeking grievances for eviction of encroachment on Government land may file original petition before the respective Tashildars.
- On receipt of such petition, the Tashildar may cause inspection at least at the level of Deputy Tashildar, to decide whether the Government land is being encroached or not. If convinced of the fact that the Government land is being encroached, he shall serve a 'Show Cause Notice' to the encrocher under Section 7 of Tamil Nadu Land Encroachment Act, 1905. Subsequently, other procedure as laid down under the Tamil Nadu Encroachment Act should be followed within a stipulated time.
- A detailed written relpy should be sent to the petitioner giving details of the action, if any, taken as per Tamil Nadu Land Encroachment Act, 1905 and the entire process shall be completed within 60 days from the date of receipt of petition.

சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட நேர்முக கடித ந.க.எண். 6104/2025/பே1 நாள் 04.12.2025ல், சேலம் மாவட்டம் வாழப்பாடி பேரூராட்சி, வார்டு எண். 13 காசி படையாச்சி தெரு முதல் தம்மம்பட்டி சாலையில் உள்ள மகேஸ்வரி தியேட்டர் வரை வடிகால் அமைத்தல் (600 மீட்டர்) பணியினை மேற்கொண்டு அப்பகுதியில் உள்ள 90 குடியிருப்புகள் மற்றும் அவ்வழியே செல்லும் 10 குறுக்குத் தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்களிலிருந்து வெளியேறும் கழிவுநீரை பிரதான கால்வாய் வழியாக வெளியேற்றி நிரந்தர தீர்வு ஏற்படுத்துவதுடன் அப்பகுதியின் அருகாமையிலுள்ள 215 குடியிருப்புதாரர்களும் பயன்பெறுவார்கள் என்பதை தெரிவித்தும், அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், மேற்குறிப்பிட்டுள்ள பகுதிக்கு வடிகால் அமைக்கும் பணியினை ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் இப்பணிக்கு பிரத்யேகமாக ஏதேனும் ஒரு திட்ட நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து நிருவாக அனுமதி வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. (மாவட்ட ஆட்சியரின் நேர்முக கடித நகல் இணைக்கப்பட்டுள்ளது)

வாழப்பாடி பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க. எண். 789/2025/பே1 நாள் 17.12.2025ல் சேலம் மாவட்டம் வாழப்பாடி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட அக்ரஹார வாழப்பாடி கிராமம் 13வது வார்டு காசி படையாச்சி தெருவில் சேகரமாகும் வடிகால், காசி படையாச்சி தெருவில் தனியார் இடத்தில் கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு காசி படையாச்சி தெரு முதல் தம்மம்பட்டி சாலையில் உள்ள மகேஸ்வரி தியேட்டர் வரை வடிகால்

அமைத்து பணிகள் மேற்கொள்ள சர்வே எண். 19,28,29,30,41,45,48,49 மற்றும் 50ல் உள்ள ஏரி வாய்க்கால் நிலத்தினை அளவீடு செய்து விரிவான அறிக்கையினை வழங்குமாறு வாழப்பாடி வட்டாட்சியரிடம் தெரிவிக்கப்பட்டது.

2025-26ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்க சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் ந.க.எண். 4456/2025/உ3, 09.01.2026 நாளிட்ட செயல்முறைகளில் ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணியினை மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. (சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ஆணை இணைக்கப்பட்டுள்ளது)

வாழப்பாடி பேரூராட்சி அலுவலக மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள் 09.01.2026ன்படி மூலதன மானிய திட்டத்தில் வாழப்பாடி பேரூராட்சி, காசி படையாச்சி தெரு முதல் தம்மம்பட்டி மெயின்ரோடு மகேஸ்வரி தியேட்டர் வரை வடிகால் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.47.00 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 23.01.2026ஆம் தேதியில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ் பூர்வீகா கன்ஸ்டிரக்சன், கோணஞ்செட்டியூர், பி. கண்ணகாரனூர் அஞ்சல், வாழப்பாடி என்ற நிறுவனத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரின் 27.01.2026 நாளிட்ட செயல்முறைகள் ந.க. எண். 789/2025/அ1ல் பணி ஆணை வழங்கப்பட்டது. (வாழப்பாடி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் ஆணை இணைக்கப்பட்டுள்ளது)

மேலும், மேற்படி பணி நாளது தேதியில் ஒப்பந்ததாரரால் 550 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைத்தல் பணி முடிக்கப்பட்டு மீதமுள்ள பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திரு.கே. தொப்பாளன் என்பவரால் பாப்பான் ஏரி வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P. No. 7366/2026ன் மீது 25.02.2026ஆம் தேதியில் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையில் குடிநீருடன் கழிவுநீரைக் கலப்பது எப்போது நிறுத்தப்படும் என்பது குறித்து அறிக்கை அளிக்க வேண்டும். அந்த அறிக்கையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளனர் மற்றும் ஏற்கனவே ஏற்பட்ட சேதங்களை சரிசெய்ய என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க உள்ளனர் என்பது குறிப்பிடப்பட வேண்டும் என நீதி பேராணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நீதி பேராணையின் ஒளி நகல் இணைக்கப்பட்டுள்ளது) மேலும் திரு. கே. தொப்பாளன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P. No.7366/2026ல் தொடரப்பட்ட வழக்கானது சென்னை உயர்நீதிமன்றத்தில் நாளது வரை நிலுவையில் உள்ளது என்பதையும் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டம், வாழப்பாடி பேரூராட்சி 13வது வார்டு, காசி படையாச்சி தெருவின் 90 குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அப்பகுதியின் அருகே உள்ள பாப்பான் ஏரி உபரி நீர் வாய்க்கால் வழியாக அருகே உள்ள விவசாய நிலங்களில் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில், வாழப்பாடி பேரூராட்சியில் 2025-26ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் மழைநீர் வடிகால் காசி படையாச்சி தெரு முதல் தம்மம்பட்டி மெயின்ரோடு மகேஸ்வரி தியேட்டர் வரை வடிகால் அமைத்து தம்மம்பட்டி மெயின் ரோடு பகுதியில் அமைந்துள்ள மெயின் வடிகால் வழியாக கழிவுநீர் வெளியேறும் வகையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பகுதியில் உள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் பாப்பான் ஏரி உபரி நீர் வாய்க்காலில் கழிவு நீர் வெளியேற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததன் அடிப்படையில் தான் ஏரி வாய்க்காலில் கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்காகவே இப்பணி தேர்வு செய்யப்பட்டு சுமார் 90 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 16.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.05.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. இரா. மகாராஜா என்பவர் தனது 20.06.2026 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நலக்குறைவு காரணமாக தன்னால் 16.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு வர இயலாது எனவும், இவ்விசாரணையை மற்றொரு நாளில் மாற்றி தரக் கோரி கேட்டுக்கொண்டுள்ளார். எனவே மனுதாரர் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரரான வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- சேலம் மாவட்டம், வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட 13வது வார்டு, காசி படையாச்சி தெருவின் 90 குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அப்பகுதியின் அருகே உள்ள பாப்பான் ஏரி உபரிநீர் வாய்க்கால் வழியாக அருகே உள்ள விவசாய நிலங்களில் வெளியேற்றப்பட்டு வந்த நிலையில், அப்பகுதியிலுள்ள விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் கழிவுநீர் வெளியேற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, உபரி நீர் வடிகாலை அடைத்ததால் கழிவுநீர் வெளியேற வழியின்றி, அப்பகுதியில் பொது சுகாதார சீர்கேடு ஏற்பட்டதுடன் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டது.
- இதனை தொடர்ந்து சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 15.10.2025 அன்று நேரடி ஆய்வு செய்யப்பட்டு, காசி படையாச்சி தெருவில் 90 குடியிருப்புகள் மற்றும் அருகாமையில் உள்ள 215 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் புதியதாக வடிகால் அமைத்து கழிவுநீர் வெளியேற்ற பணிகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டது.
- இதன் அடிப்படையில் 13வது வார்டு படையாச்சி தெருவில் சேகரமாகும் வடிகால் காசி படையாச்சி தெருவில் தனியார் இடத்தில் கழிவுநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு 2025-26ஆம் ஆண்டு மூலதன மான்ய நிதியின் கீழ் காசி படையாச்சி தெரு முதல் தம்மம்பட்டி சாலையிலுள்ள மகேஸ்வரி தியேட்டர் வரை ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது.
- இதனை தொடர்ந்து, மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை 09.01.2026 அன்று வெளியிடப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு 27.01.2026 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.
- மேற்படி பணி நாளது தேதி வரையில் ஒப்பந்ததாரரால் 550 மீட்டர் நீளத்திற்கு பொதுமக்களின் நலன் கருதி மழை நீர் வடிகால் அமைக்கப்பட்டு வரும் நிலையில், திரு. கே. தொப்பாளன் என்பவரால் பாப்பான் ஏரி வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P. No. 7366 / 2026) தொடரப்பட்டு, இவ்வழக்கில் 25.02.2026 நாளிட்ட ஆணையில் குடிநீருடன் கழிவுநீரை கலப்பது எப்போது நிறுத்தப்படும் என்பது குறித்தான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்து வழக்கானது 27.02.2026 அன்று ஒத்திவைக்கப்பட்டு, இவ்வழக்கானது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில்

இந்நாள்வரை நிலுவையில் உள்ளது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் 20.06.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, இம்முறைமன்ற நடுவத்தில் 10.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு 23.06.2026 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. இதனை தொடர்ந்து, மனுதாரர் தனது 09.07.2026 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் 10.07.2026 அன்று விசாரணை நடைபெறுவது குறித்து 09.07.2026 அன்று தொலைபேசி மூலம் தான் அறிந்து கொண்டேன் எனவும், மேற்படி இம்முறைமன்ற நடுவ 23.06.2026 நாளிட்ட அழைப்பாணை தனக்கு கிடைக்க பெறவில்லை எனவும் தெரிவித்து, தனக்கு மற்றொரு வாய்ப்பு அளிக்கும் வகையில் விசாரணை நாளினை முன்னதாகவே தெரிவிக்கும்படி கோரியிருந்தார்.

9. மேற்காணும் மனுதாரரின் கோரிக்கையை ஏற்று, 04.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.07.2026 தேதியிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

10. மனுதாரர் திரு. இரா. மகாராஜா என்பவர் 04.08.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் -

- சேலம் மாவட்டம், வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 12வது வார்டு எல்லைக்கு உட்பட்ட இடங்களிலுள்ள நஞ்சை விவசாய நிலங்களுக்கு பாயும் பாப்பான் ஏரி வாய்க்காலில் சாலை மற்றும் கழிவுநீர் வடிகால் அமைக்க கோரியதற்கு அப்போதைய செயல் அலுவலர் 23.02.2023 நாளிட்ட கடிதத்தில் நிராகரித்து இருந்தார்.
- ஆனால், அதே பாப்பான் ஏரி நீர்வழி பாசன வாய்க்காலில் தற்போது பேரூராட்சி மூலம் கழிவுநீர் வாய்க்கால் அமைப்பதற்கும் மற்றும் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ஏற்கனவே பாப்பான் ஏரியில் கழிவுநீர் கலக்கப்படுவது தொடர்பாக பாப்பான் ஏரிப்பாசன விவசாயிகள் சங்க தலைவர் திரு. தொப்பாளன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் W.P. No.13375 of 2020) நீர்வழிப் பாதையில் உள்ள கழிவுநீர் ஆக்கிரமிப்புகளை அகற்றிட மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலருக்கு பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையை மீறி தற்போது பேரூராட்சி மூலம் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது நீதிமன்ற அவமதிப்பு செயலாக உள்ளது.
- எனவே கீழ்க்காணும் நிவாரணம் வேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

    1. பாப்பான் ஏரி நீர்வழி பாதைகளில் நடைபெற்ற கட்டுமானங்களை உடனடியாக அகற்றிட ஆணை வழங்கிட வேண்டுகிறேன்.
    2. சம்பந்தப்பட்ட இடத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் பொதுப் பணித்துறை மூலம் ஆய்வு செய்து நீர்வழிப் பாதைகளில் கழிவுநீர் கலக்காவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.
    3. நீர்வழிப் பாதைகளை மீண்டும் பழைய நிலையான விவசாய பயன்பாட்டிற்கு ஏற்றாற்போல் கொண்டு வர வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.
    4. நீர்வழிப் பாதைகளை காத்திட பல்வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ள நிலையிலும் மற்றும் நீதிமன்ற தீர்ப்புரைகள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் அவற்றிற்கு எதிராக செயல்படும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்திட வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

5. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழக்கு எண். W.P. No.29422 of 2025 & WMP. No. 32968 of 2025ல் 08.10.2025 நாளிட்ட தீர்ப்புரையில் நீர்நிலைகளில் கட்டுமானங்கள் கட்ட அனுமதியளித்த அலுவலர்கள் மீது உரிய துறை நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் இதனால் ஏற்பட்ட நிதியிழப்பை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து இழப்பீடு பெற்று ஈடு செய்வதற்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

6. மேற்காணும் தீர்ப்பின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொண்டும் மற்றும் நிதியிழப்பிற்கான இழப்பீடு தொகை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெற்று பேரூராட்சி திட்டங்களுக்கு பயன்படுத்தலாம் என இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

11. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 12வது வார்டு எல்லைக்கு உட்பட்ட இடங்களில் அமைந்துள்ள நஞ்சை விவசாய நிலங்களுக்கு பாயும் பாப்பான் ஏரி நீர்வழி பாதையில் நீதிமன்ற தீர்ப்புரைகளுக்கு எதிராக கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்ட கட்டுமானங்களை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என மனுதாரர் தெரிவித்திருப்பதை அவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேற்காணும் மனுதாரரின் புகார் தொடர்பாக, வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 13வது வார்டு காசி படையாச்சி தெருவில் அமைந்துள்ள 90 குடியிருப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் அப்பகுதியின் அருகேயுள்ள பாப்பான்ஏரி உபரிநீர் வாய்க்கால் வழியாக அருகே உள்ள விவசாய நிலங்களில் வெளியேற்றப்படுவதை தடுத்திடும் பொருட்டு, சேலம் மாவட்ட ஆட்சித்தலைவரால் நேரடி ஆய்வு மேற்கொண்டு, 2025-26ஆம் ஆண்டு மூலதன மானிய நிதியின் கீழ் காசி படையாச்சி தெரு முதல் தம்மம்பட்டி சாலையிலுள்ள மகேஸ்வரி தியேட்டர்வரை ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் வடிகால் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மூலம் 550 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு வந்த நிலையில் திரு. கே. தொப்பாளன் என்பவரால் பாப்பான்ஏரி வாய்க்காலில் கழிவுநீர் கலப்பது தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P.No.7366/2026) தொடரப்பட்டு, அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரது வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

இந்நேர்வில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டிருப்பது கருத்தில் கொள்ளப்பட்டது.

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to,-

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர் தனது முறையீட்டு மனு மற்றும் வாக்குமூலத்தில் வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட பாப்பான்ஏரி நீர்நிலையில் கழிவுநீர் வடிகால் அமைக்கப்பட்டது குறித்து புகாராக தெரிவித்து அதனை அகற்றிட கோரியுள்ளார். இதே பொருள் தொடர்பாக திரு. கே. தொப்பாளன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண். 7366/2026) தொடரப்பட்டு அவ்வழக்கானது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக எதிர்மனுதாரரான வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருப்பது உறுதி செய்யப்பட்ட நிலையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3)(b)ன்படி மனுதாரரின் 01.04.2026 நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என்பதால் இப்புகார் மனு தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. இரா. மகாராஜா,
35, தம்மம்பட்டி மெயின் ரோடு,
அக்ரஹார வாழப்பாடி,
சேலம் மாவட்டம் - 636 115.
2. செயல் அலுவலர்,
வாழப்பாடி தேர்வுநிலை பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

சென்னை–600 032